www.tamilarangam.net

# சிந்தனை

சித்திரை

1995

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை

## அரசாங்கம் மக்கள் முன் வைக்க வேண்டும்

சுகனின் கவிதைகள்

வாக்குறுதி (சிறுகதை)

அல்ஜீரியாவில் ஜனநாயகம்?

பின் பனிக்காலம் (கவிதை)

சுதந்திர வர்த்தக வலையத்தில் பெண்கள்

**பம்பாய்** (விமர்சனம்)



SINTHANAI 1/95 - 30.04.1995

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பன்னிரண்டு மாதங்களுக்கு முன் எம்மிடமிருந்து பலாத்காரமாகப்**
**பிரிக்கப்பட்ட நண்பன் ச. சபாலிங்கத்தை**
**இந்த இதழை வெளியிடும் தருணத்தில் நினைவுகூருகின்றோம்.**



.....உங்களுக்காக இன்னுமோர் விளக்கை
ஏற்றியே அணைந்த விளக்குகள் இவர்கள்
உங்களுக்காக பிஞ்சினை வளர்த்தே
உதிர்ந்த மலர்கள் இவர்கள்
இன்றைய தீர்ப்புகள் இப்படியாயிற்று
நாளையிந்த பேராற்றுப் படுகையில்
புது வெள்ளமாகப் புரண்டிடவுள்ள
என்னரும் பேரரே
நாளை உங்கள் தீர்ப்பெதுவாகும்
முகத்தில் கரியைப் பூசி
சாக்கடையில் வீசப்பட்ட
பொற்சிலைகளுக்கு
நாளை உங்கள் தீர்ப்பு எதுவாயிருக்கும்

( கவிஞர் ஜெயபாலனின் கவிதையிலிருந்து )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை

# அரசாங்கம் மக்கள் முன்வைக்க வேண்டும்

மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்.
அரசுகளுக்குப் போர் தேவைப்படுகின்றது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளும் அதன் முறிவும் மேற்கூறிய வசனங்களின் உண்மையை எமக்கு உணர்த்துகின்றன.

இலங்கையில் வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி சாதாரண பொது மக்கள் சமாதானத்திற்காகவும் அமைதியான வாழ்விற்காகவும் ஏங்குகின்றார்கள் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இருக்க முடியாது. இந்த மக்கள் தமது அபிலாஷைகளை பல்வேறு ரூபத்தில் வெளிக்காட்டியுள்ளார்கள். 1994ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் வடபகுதி தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் வாழும் பெரும்பான்மையான மக்கள் இனமத வேறுபாடுகளின்றி – சமாதான வாழ்விற்க்கான ஆர்வத்தை வெளிக்காட்டினார்கள் என்றே கூறலாம்.

பொருளாதார மாற்றும் சமூக நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பெருத்த வேறுபாடுகள் ஒன்றும் இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளையோ அல்லது மற்றைய முதலாளித்துவ சமூகக் கட்டுமானங்களையோ பாரதூரமாக மாற்றியமைக்கப் போவதாகப் பொதுஜன முன்னணி சவால் விடவில்லை. மேல்தட்டு வர்க்கங்களின் இலாபங்களிலோ அல்லது சொத்துக்களிலோ எந்த வித பாதிப்பையும் கொண்டுவரும் திட்டங்களையும் அவர்கள் முன்வைக்கவில்லை. சுருங்கக் கூறுவதாயின், இந்த விடயத்தில் இரு அரசாங்கங்களும் ஒரு நாணயத்தின் மறுபக்கம் என்பதைவிட, ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாணயத்தின் அதே பக்கம் என்றே கூறலாம்! எனினும் மக்களை ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து விலகி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்கத் தூண்டியது பதினேழு வருட ஒடுக்கு முறை ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பும், தொடர்ச்சியான போர், நாட்டின் அமைதியின்மை ஆகியவற்றினால் ஏற்பட்ட சலிப்புந்தான். மாற்றத்திற்கும் அமைதிக்குமான மக்களின் விருப்பு வாக்குகளே சந்திரிகா அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டுவந்தன.

பதவிக்கு வந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் இவற்றை ஊர்ஜிதப்படுத்தின.

ஐக்கிய தேசியக்கட்சி கட்டிக் காத்த பொருளாதாரக் கொள்கைகள் மேலும் கட்டிக் காக்கப்படும் என்பதை வலியுறுத்த அரசாங்கம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டது. அதே வேளையில் மாற்றத்தைக் காட்டும் பூச்சு வேலைகளும் செய்யப்பட்டன. பல்வேறு கமிஷன்கள், குழுக்கள், கமிட்டிகள் – பல் வேறு விசாரணைகள். பல தலைகள் உருண்டன, உருளலாம். ஆனால் பெருமளவில் பல பழைய தலைகள் புதிய பதவிகளில் ஒட்டிக் கொண்டன. அதிகாரச் சதுரங்கத்தில் சில காய்கள் வெட்டப் பட்டன, சில பலமான இடங்களைப் பிடித்துக் கொண்டன. இறுதியில் மக்களைப் பொறுத்த மட்டில் இவை எல்லாம் ஒன்றுதான். மக்களுக்கு முக்கியமாகவும் உடனடியாகவும் தேவையாக இருந்தது சமாதானமான வாழ்வாகும்.

## சமாதானப் பேச்சு வார்த்தைகள்

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த பேச்சு வார்த்தையும், தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தமும் சகல தரப்பினரதும், முக்கியமாக போரின் கொடூரமான பக்கங்களைத் தரிசித்துக் கொண்டிருந்த வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற்றது என்றே கூறலாம்.

தமது அபிலாஷைகளை எந்தவிதமான சுதந்திரமான ஜனநாயக வெளிப்பாடுகள் மூலமாகவும் வெளிப் படுத்த முடியாத நிலமையிலுள்ள வடக்குப் பிரதேசத் தமிழ் மக்கள் – சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காகச் சென்றவர்களுக்கு அளித்த வரவேற்புகள்,

www.tamilarangam.net

தொடர்ந்து சென்ற சமாதானக் குழுக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளல் ஆகிய சமிக்ஞைகள் மூலம் சமாதானம், அமைதியான வாழ்வு ஆகியவற்றிற்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள். மக்களின் இந்த ஏகோபித்த சமாதானத்திற்கான விருப்பங்களே பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைகளையும் சமாதானப் பேச்சு வார்த்தைகள், தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஆகியவற்றை நோக்கி நகர்த்தின.

## போர் வியாபரிகள்

ஆனால் அதே வேளையில் அரசு, ஆயுத அதிகாரத்துவங்கள் ஆகியவற்றின் தேவைகள் போரை வேண்டி நின்றன. பதினேழு வருடப் போர் மற்றும் ஆயுதக் கலாச்சாரங்களும் நடவடிக்கைகளும் பல போர் வியாபாரிகளையும் ஆயுத அதிகாரத்துவங்களையும் உருவாக்கியுள்ளன. ஆயுத இறக்குமதியாளர்கள், கமிஷன் ஏஜண்டுகள், கொந்தராத்துக்காரர்கள் எல்லாம் அரசின் போர் நடவடிக்கையினால் இலாபம் பெற்றுமுள்ளனர். பேரினவாத அரசு சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதன் மூலமும், அதன் அடிப்படையிலான சுரண்டல்களின் மூலமாகவும் இலாபம் பெறும் சக்திகள் மேலும் பேரின வாத அரசியல் தொடர்வதை நியாயப்படுத்தவும் அதற்கான ஒரு போர் தொடர்வதையும் வேண்டி நிற்கின்றன. இதே நிலைமைகள் தேசிய விடுதலைப் போராட்டங்கள் உருவாக்கிய ஆயுத இயக்கங்கள் மூலமாகவும் உருவாகியுள்ளன. ஆயுதக் காலச்சாரங்கள் உருவாக்கிய அதிகாரத்தினால் தமக்கென சலுகைகள், அதிகாரங்கள், வியாபார மற்றும் தொழில்

www.tamilarangam.net

இலாபங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்ட சக்திகள் தமது அதிகாரங்களையும் சலுகைகளையும், இலாபங்களையும் சுலபமாக விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கப் போவதில்லை. ஆயுதமற்ற நிலைமைகளில் தமது பாதுகாப்பு, மக்கள் மீது செலுத்தப்படும் அதிகாரம், போரினால் தமக்கு வேண்டியவர்களுக்கு உரித்தாகிய வியாபார மற்றும் தொழில் இலாபங்கள் யாவும் இல்லாமல் போகும் என்பதையும் உணருகின்றார்கள். இந்த ஆயுதபலமுள்ள ஆளும் சக்திகள் எல்லாவற்றிற்கும் போர் தேவைப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலமைகளிலேயே தற்போதைய அரசியல் நிலமைகளை நாம் நோக்க வேண்டியுள்ளது. எந்த நிலமைகளிலும், எந்த நடவடிக்கையும் மக்களின் நல்வாழ்வையும் உரிமைகளையும் மேலாக மதிக்கும் அடிப்படையில் எடுக்கப்படுவதையே மக்கள் விரும்புவார்கள்.

புதிய அரசாங்கம் பதவியேற்றபின் ஆரம்பிக்கப்பட்ட வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கம், தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தம், விமானப் படைகளின் குண்டு வீச்சு நிறுத்தம், கிளாலிப் பாதையூடாகப் பிரயாணம் செய்யும் மக்கள் அச்சமின்றிப் போய்வர ஏற்பட்ட நிலமை ஆகியவை வடபகுதி மக்களுக்கு ஓரளவு மன நிம்மதியையும் ஆறுதலையும் கொடுத்தன. எனினும் பொதுமக்களின் போக்குவரத்திற்கும் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் பெருமளவில் உதவக் கூடிய பூநகரிப்பாதை மற்றும் ஆனையிறவுப் பாதை ஆகியவை

www.tamilarangam.net

பாவனைக்குத் திறந்துவிடப்படுவதில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் விசனத்துக்குரியவையாகும். இந்த விடயத்தில் அரசு, மற்றும் புலிகளின் நலன்கள் முன்நிலைப்படுத்தப்பட்டனவே தவிர மக்களின் நலன்களில் யாரும் அக்கறைப் பட்டதாகத் தெரியவில்லை. பூநகரிப்பாதையைத் திறப்பதற்கு முன்நிபந்தனையாக பூநகரியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமென்பதை அரசு ஏற்காமல் இருந்தது தொடர்ச்சியான சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தடங்கலாகவே இருந்தது. அன்டன் பாலசிங்கம் கூறியது போல அரசாங்கம் தனது நல்லெண்ணத்தைக்காட்ட – பூரண சமாதானம் ஏற்படும் பொழுது சகல இராணுவ முகாம்களும் அகற்றப்படும் என்பதற்கு முன்னோடியாக – இதைச் செய்ய வேண்டும் என்பதில் உண்மையும் இருக்கின்றது. மறுபுறத்தில் அரசு பூநகரி முகாமை அகற்றி பூநகரிப் பாதையைத் திறக்காமல் இருப்பது புலிகளுக்கு மறைமுகமாகச் செய்யும் உதவியாகவும் உள்ளது. கிளாலிப் படகுச் சேவை, வாகனச் சேவை மற்றும் தங்குமிடவசதிகள் மூலம் பெறும் வருமானங்கள் பூநகரிப்பாதை திறக்கப்படும் வரைதான் நிலைத்திருக்கும். இன்றைய பேச்சு வார்த்தையின் முறிவு இந்த இலாபங்களைத் தொடர வைத்துள்ளது!

## தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு

கலாகாலமாகத் தீர்க்கப்படாத தேசிய இனப் பிரச்சினைக்குத்

www.tamilarangam.net

தீர்வு தேடும் பொழுது சில மனிதர்கள், சில குழுக்களின் சுய தேவைகளைப் பார்க்கிலும் தேசிய இனத்தினதும் நாட்டினதும் பரந்துபட்ட நன்மைகளே மனத்திற் கொள்ளப் படவேண்டும். மறுபுறத்தில் இதுவரைகாலமும் இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்குக் காரணமாக இருந்த அரசிடமிருந்தே அதிகமான விட்டுக் கொடுப்புக்களும் பெரும் தன்மைகளும் காட்டப்பட வேண்டும். தமிழ் மக்கள் இது வரைகாலமும் அனுபவித்த வரலாறு காணாத துயரங்கள் வெறும் எண்ணைக்கும் மினசாரத்திற்குமாகவல்ல. தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டத்திலேயே அவர்கள் அவ்வாறான துயரங்களையும் அழிவுகளையும் சந்திக்க வேண்டியேற்பட்டது. அதனால் வெறும் சலுகைகள் தமிழ் மக்களை என்றும் திருப்திப்படுத்திவிடப் போவதில்லை. இந்தச் சலுகைகள் இன்று சில நிமிட நேரத்தில் ஒரு பேனாவின் கீறலினால் மறுக்கப் பட்டுவிட்டன.

தமிழ் மக்களின் இருப்பும் உரிமைகளும் பூரணமாக உறுதிப்படுத்தப்படும் தீர்வு ஒன்றையே அவர்கள் நிரந்தரமான சமாதானத்திற்கான வழியாகவும் கருதுவார்கள். இந்த வகையில் நிரந்தரமான தீர்வு ஒன்றினை முன்வைக்கும் கடமை இந்த அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. இப்படியான எந்த ஒரு தீர்வையும் முன் வைக்காது மேலும் மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்துவது யாருக்கும் நன்மை பயக்கப் போவதில்லை. இவ்வாறான ஒரு தீர்வு வைக்கப் படுவதற்கும் அதற்கான பேச்சு வார்த்தைகள்

www.tamilarangam.net

நடத்தப் படுவதற்கு ஏற்ற முறையில் அவசியமான சகல விதமான விட்டுக் கொடுப்புக்களையும் செய்வதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. அது பூநகரி இராணுவ முகாம் அகற்றலானாலும் வேறு எதுவானாலும் செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

தமீழீழ விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டதால் பொருளாதாரத் தடையை மீண்டும் அமுல் படுத்தலும், குண்டு வீச்சுகளை ஆரம்பிப்பதும், கிளாலிப் படுகு சேவையை தடை செய்வதும் மக்கள் கொடுத்த ஆணையை மீறும் செயல்களாகும். இவை சிங்களப் பேரினவாதத்திற்கு சரணாகதியடையும் செயல்களாகும்.

சந்திரிகா அரசாங்கம் தேசிய இனப் பிரச்சனைக்கான தனது தீர்வினை இன்னும் தெளிவாக மக்கள் முன் வைக்கவில்லை. அவ்வாறான ஒரு தீர்வினை முன்வைக்கத் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் – இந்த அரசாங்கம் தனது அழிவிற்கும் நாட்டினது அழிவிற்கும் வழிவகுத்துக் கொண்டிருக்கின்றது. தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் கொடுக்குப்படும் தீர்வு அல்ல. நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு, தமிழ் முஸ்லீம் மக்களுக்கு, பொதுவாக நாட்டின் சகல மக்களுக்குமான தீர்வாகும். இப்படியான தீர்வை அரசாங்கம் நாட்டு மக்களின் முன் சமர்ப்பிக்க வேண்டும். இது பற்றி அது உடனடியாக மக்களுடன் – சிறப்பாக தமிழ் மக்களுடன் பேச வேண்டும்.

**– அகிலன்**

www.tamilarangam.net

# சுகனின் கவிதைகள்

''சுகனின் கவிதைகள் தமிழிற்குப் புதிது
ஆனால் புதிரானதல்ல.
தற்போது வேலையிழந்தவர்க்கான
உதவிப்பணத்தில் காலம் போவதாகச்
சொல்லும் சுகன், விரைவில்
உடல் ஊனமுற்றோருக்கான உதவிப் பணம்
பெறும் காலம் வரலாம் எனவும்
இறந்து போன தனது தந்தையார்
கனவில் வந்து போவதாகவும்
சொல்லுகிறார் ......................................''



www.tamilarangam.net

# மீண்டும் வேலை தருக.

திருவாளர் AYRINHAC Patrice அவர்களுக்கு
பதிவுத்தபாற்கடிதம்:
கடுங்குற்றமாகத் தாங்கள் கருதிய
காரணங்களடங்கிய வேலை நீக்கக் கடிதம்
15 Novembre 1994 கிடைத்தது.

பாவனைக்கு உதவாத சொக்கிலேற் கேக் துண்டை
27 Octobre 1994 காலை நான் பூவலில்* அடித்ததும்
இரவு இரண்டு மணி வரை வேலை செய்ய மறுத்ததும்
உங்களுக்குப் பெருத்த நட்டத்தை ஏற்படுத்திருக்கும்.
உண்மையில் திரு MERZOUG BEN SAOULA
தனது பிள்ளை சாப்பிடும் என அதை எடுத்து வைத்திருந்தான்
நல்ல வெறியில் வீட்டிற்கு எடுத்துச் செல்ல மறந்து போனான்.

இறுப்பானுக்குக் கடனில்லை
உழைப்பானுக்குப் பெண்ணில்லை.
பண்ணைக்காரன்** பெண்டில்
பணியக் கிடைந்து செத்தாள்:
பரியாரி பெண்டில்
புழுத்துச் செத்தாள்
அரக்கப் பரக்க அடித்தாலும்
படுக்கச் சீலம்பாயில்லை எனக்கு.

ஏதோ விதிவசத்தால் இத் தவறு நேர்ந்தது.
மனிதன் வேலை செய்வதற்காக
இவ்வுலகத்தில் பிறப்பதில்லை.
நான் உனக்காகப் பிறந்திருக்கின்றேன்.
மீண்டும் வேலை தருக.

---

* தப்பை வாளி



** பண்ணைப்பாய் இழைப்பவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடுத்த ரெயிலுக்காக

இது GARE DU NORD

Banliene மேடை

சீ ..........

நான் ஓடி வர ரெயின் போகிறது
குளிர்கிறது
இருப்பதற்குப் பொறுமையில்லை
புத்தகங்களுமில்லை.
ரெலிக் காட் ஒன்று வாங்குகின்றேன்
யாருக்கு அடிக்கலாம் என்று யோசித்தபடியே
பாடமான ஒரு நம்பருக்கு எடுக்கிறேன்
'என்கேஜ்' ஆக இருந்தால் நல்லது என
நினைத்தபடியே
ஒருதரம் மணி அடிக்கிறது
இரண்டாம் தரம் அடிப்பதற்கிடையில்
'கட்' பண்ணுகிறேன்
என்னத்தைக் கதைப்பது ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னைத் தேடுதல்

ஆயுதப் போரை மறுத்ததற்காய்
நீ என்னைப் புத்தன் என்றாய்
" கசாப்புக் கடைக்காரன்
தானே கத்தியைக் கீழே போடான்"
எனச் சொல்வதெல்லாம்
இனி என்னால் ஏலாது

புத்தன் மிகத் தெளிவானவன்
இறந்த குழந்தையைத் தாய் ஏந்தி வந்த போது
" இறப்பது ஒரு நாள் நிச்சயம் நிகழும்"
கலங்கி இனி ஆவதென்ன தாயே
"எடுத்துச் செல்" என்றான்.

குழம்பிப் போயிருக்கும் என்னிடம் வந்தால்
நான் என்னென்ன சொல்லுவேன்

1. என்னிடம் ஏன் கொண்டு வந்தாய்?
2. கொன்றவன் காரணமில்லாமல் கொன்றிரான்.
3. எதுவும் இயற்கையாய் இறக்குமென இனி நீ எண்ணாதே.

www.tamilarangam.net

# சுவையற்றுப் போனேன் காண்!

வானத்திலிருந்து பார்க்கையில் எல்லாம் ஒன்று
நிலத்திருக்கையில்
சீவியகாலம் வரை ஜேர்மனியில் சோசல் காசு
ஒரு வருடமட்டும் பிரான்சில் ANPE
வானத்திலிருந்து பார்க்கையில் எல்லாம் ஒன்று
நிலத்திருக்கையில்
பிரான்சில் நல்ல விசா
ஜேர்மனியில் நல்லதில்லை
ஹொலண்டில் வீடு வசதிகள்
பிரான்சில் அது இல்லை.
சிறிது உப்புத் தடவி
மிளகாய்த் தூள் பிரட்டி
மீன் பொரித்து விட்டாலோ
ஜேர்மனியும் பிரான்சும் ஹொலண்டும்
எல்லாமும் ஒன்றாய்ச் சொல்லும்
நாறுது நாயே வெளியேறு!

# பிரிவிலிருந்து

பிரிவிலிருந்து
வெறுமையோடு சூனியத்திற்கும்
ஆற்றாமை, அலைச்சல், நம்பிக்கையின்மை
தனிமை, எதிர்ப்பின்மையோடு
வலுவின்மை, உற்சாகமின்மை
அக்கறையின்மை வழியாக
நிராசை, விரக்தியோடனைத்தும்
சுமந்து அலைகின்றேன்.
எதனால் ?
எதற்காக ?

www.tamilarangam.net

சிறுகதை



# வாக்குறுதி

முரளி

சூரியன் மறைவதற்கு சற்றுமுன்பு இது நடந்ததாம். யுத்தம், நோய், பசி, அவதி இவை எல்லாவற்றையும் கண்டு மனம் நொந்தார் அலி. மனம் நொந்த அலி ஒருநாள் கடவுளை வணங்கிக் கொண்டிருந்தார். கடவுள் அவர் முன் தோன்றினார். அலியின் மனக்கவலை என்னவென்று அவர் முன்பே தெரிந்துகொண்டார். இருப்பினும் என்னவென்று கேட்டார்.

யுத்தம், நோய், பசி, அவதி இவையெல்லாம் நீங்கி மக்கள் ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்று கடவுளிடம் இரந்து வேண்டினார். இவையெல்லாம் முடியாத காரியமென்றும், தனது ஆளுமையை மீறிய விசயங்கள் என்றும் ஒரேயடியாக மறுத்துவிட்டார். அலியோ கடவுளை விடுவதாகவில்லை. கடவுள் தொடர்ச்சியாக மறுத்துக்கொண்டிருந்தார்.

யுத்தம், நோய், பசி, அவதி இவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றாவிட்டால், இந்தவிடத்திலேயே உயிரை விட்டுவிடுவதாக அலி கூறிவிட்டார். கடவுளுக்குத் தலை சுற்றியது. என்ன செய்வதென்று கடுமையான யோசனை செய்தார். ஒரு விடையும் அலி ஏற்றுக்கொள்ளக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடியவாறு கிடைக்கவில்லை. கடவுள் தன் ஆளுமையையெல்லாம் மீறி யோசனை செய்தார். இந்த நேரத்தில் மனிதர்களுக்கும் தலை சுற்றியது. அவர்களின் தலைகளும் சுற்றப்பட்டன. கடவுளுக்குத் தலைச்சுற்று தெளிந்தது. அவர் ஒரு முடிவுக்கு வந்தவராய், அலியைப் பார்த்து, " அதோ அந்த பறவைகளைப் பார்த்தாயா! எத்தனை வகைப்பறவைகள் பார்த்தாயா! அந்த பறவைகள் போலல்லாமல், ஒரு புதிய பறவையை, நான் படைத்தது போன்று உன்னால் சிருஷ்டித்துக் காட்டமுடியுமா? என்று கேட்டார்.

அலி சற்று யோசித்தார்.

உன்னால் ஒரு புதிய பறவையை சிருஷ்டித்துக் காட்டமுடியுமென்றால் இந்த மக்களை யுத்தம், நோய், பசி இவற்றிலிருந்து காப்பாற்றுகிறேன் என்று கடவுள் கூறினார். கடவுளின் வாயிலிருந்து காப்பாற்றுகிறேன் என்ற வார்த்தையைக் கேட்டதும், அலியின் மனம் குளிர்ந்தது. கடவுளின் கட்டளை துரும்பாய்ப் போனது. நாளை ஒரு புதிய பறவையுடன் கடவுளைச் சந்திப்பதாக அலி கூறிவிட்டுச் சென்றார்.

சூரியன் மறைவதற்குச் சற்று முன் இது நடந்தது.

மறுநாள் அதிகாலை இளஞ்சூரியனின் வெப்பத்தில் ஒரு புதிய பறவையை அலி சிருஷ்டித்தார். சூரியன் மறைவதற்குச் சற்று முன் தான் கடவுள் அலி முன் தோன்றினார். கடவுள், அலி சிருஷ்டித்த அந்த புதிய பறவையைக் கண்டு வியந்து போனார். இந்தப் பறவை பறக்குமா என்று கேட்டார். அதற்கு, ஆம் என்று, அலி பறவையைப் பறக்கவிட்டார். அந்தப் பறவை பறந்து சென்று, இன்றோ நாளையோ முறிந்து நிலத்தில் விழுந்து விடப்போகின்ற ஒரு பட்டுப்போன மரத்தின் கிளையின் நுனியில் சென்று இருந்தது. அந்தப் பறவை கடவுள் படைத்த பறவைகள் போலல்லாமல், மரக்கிளையில் கால்களைப் பற்றித் தலைகீழாய் தொங்கியது. கடவுள் சிரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் படைத்தது போன்று முழுமையானது தானே நீ சிருஷ்டித்த பறவை" என்று கடவுள் அலியைப் பார்த்துக் கேட்டார். அதற்கு ஆம் அது பறந்ததை நீங்கள் நேரில் பார்த்தீர்கள் தானே என்றார் அலி. அந்தப் பறவையை பரிசோதனை செய்யவேண்டுமென்று, கடவுள் அலியிடம் கேட்டுக் கொண்டார். அலி அந்தப் பறவையைப் பிடித்து கடவுளின் கைகளில் கொடுத்தார். கடவுள் மேலும் கீழுமாக அப்பறவையைப் பரிசோதனை செய்தார். அதன் சிறகுகள் ஏனைய பறவைகளின் சிறகுகள் போலல்லாமல், இறப்பர் போன்று தடிப்பாககாவும், ஒரு நாய்க்குட்டியின் முகத்தையும் ஒத்திருந்தது. அதற்கு மலவாசல் இருக்கவில்லை. கடவுள் அலியைப் பார்த்து மீண்டும் சிரித்தார். அது கொடுப்புச்சிரிப்பு.

"பார்த்தாயா அலி, நீ சிருஷ்டித்த பறவைக்கு மலவழியைக் காணவில்லை. தவறி விட்டாயே அலி என்றார் கடவுள்.

இருப்பினும் அது பறக்கிறது தானே என்றார் அலி.

இருப்பினும் இல்லை அலி . . . . இருப்பினும் இல்லை. மிகச் சரியாக . . . . மிகச் சரியாக சிருஷ்டித்திருக்க வேண்டும் ஒரு பறவையை, ஒரு பிழையுமின்றி உன்னால் சிருஷ்டிக்க முடியவில்லை பார்த்தாயா! இத்தனை கோடிக்கணக்கான மனிதர்களையும், ஏனையவற்றையும் படைத்த நான் எப்படி தவறுகளின்றி படைத்திருக்க முடியும், என்றார் கடவுள். சூரியன் மறைவதற்குச் சில கணங்களுக்கு முன் இது நடந்தது. சூரியனின் கடைசிக்கதிர்கள் கூட அலியைச் சுட்டுப் பார்த்தன. அலி கடவுளுடன் மறுவாதம் செய்யவில்லை. பறப்பவையெல்லாம் பறவைகள் அல்ல, கறுப்பெல்லாம் காகமுமல்ல என்ற தர்க்க வழக்கிற்குள் அலியும் ஆட்கொள்ளப்பட்டுவிட்டார். வெற்றி என்றும் கடவுளுக்கே.

சூரியன் மறைந்து விட்டான். அதன் பின் நிலவும் வரவில்லை. நீண்ட அமாவாசை. யுத்தம், நோய், பசி, அவதி இவற்றையெல்லாம் கண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனம் நொந்த அலியைச் சுற்றி, இருளின் பிடியில் அகப்பட்டுக்கொண்ட அந்தப் புதிய பறவைகள் அலியைச் சுற்றி பறந்துகொண்டிருந்தன. சில பழங்கள் உள்ள மரங்களை நோக்கியும், சில பட்டுப் போன மரங்களை நோக்கிப் பறந்தன. அந்த மரங்களின் கிளைகளில் கால்களைப் பற்றி தலைகீழாய்த் தொங்கின.

சூரியன் மறைவதற்குச் சற்றுமுன் தான் நான் எனது பள்ளிகூட வாழ்க்கையை இழந்தேன்.
சூரியன் மறைவதற்குச் சற்றுமுன்தான் நான் துப்பாக்கிச் சுட பயிற்சி பெற்றேன்.

அதிகாலை இளஞ்சூரியனின் வெப்பத்தில் ஒருநாள் இளமை உணர்வைக் பெற்றுக்கொண்டேன். அன்று சூரியன் மறைவதற்குச் சற்று முன்தான் எனது இளமையை கொல்வது எப்படியென்று கற்பிதம் செய்யப்பட்டேன். சூரியன் மறைவதற்குச் சற்றுமுன்தான் நான் விமானம் ஏறினேன். அதன்பின் நீண்ட அமாவாசை. எனது கண்கள் இந்த இருளில் பழக்கப்பட்டுப் போயின. இருந்தும் என்னால் துலக்கமாக பார்க்க முடிகிறது. அது சூரியன் எனக்குத் தந்த வரம். அதிகாலை இளஞ்சூரியன் என் கன்னத்தில் முத்தமிடும் உணர்வு பற்றி, துலக்கமான வெளிச்சம் பற்றி கனவு காண்கிறேன். எனக்குத் தெரியும் என் வீட்டு முற்றத்தில் முருங்கை இன்னும் அழகான வெள்ளை பூக்கள்தான் பூக்கும். . . . . . முற்றத்து ஒற்றைப் பனையை தறித்திருப்பார்களா? . . . . . . அந்த முள்முருங்கை இன்னும் சிவப்பு பூக்கள் தானா பூக்கும்?

நானொரு பாவி. ஒரு அலியைப் போல, ஒரு வெளவாலைப் போல் குரூரக்கடவுளர்களால் ஏமாற்றப்பட்ட பாவி நான்.

www.tamilarangam.net

# பின் பனிக்காலம்

— ந . சுசீந்திரன்

பட்டு விரித்திருக்கு
இந்த பச்சை நிலப் பரப்பில் — வெள்ளைப்
பட்டு விரித்திருக்கு
இந்த பச்சை நிலப்பரப்பில்

குட்டி வீடதற்கும்
நகர் கோபுர வாசலுக்கும்
மாடி வீட்டிற்கும்
மதக் கோயிற் கூம்பருக்கும்
வெண்மலர்க் கூரை வைத்து
வையம் ஒன்றெனக் கூறிவைத்து
வானவர் பூச் சொரிந்தார்
முல்லை மாதவள் மடி திறந்தாள்

கொல்லைப் புறத்தினிலே — குளிர்
தின்ற குழந்தைக்கும்
திட்டில் உன்னியதன் தேக்கத்தில்
போய் விழுவார்
வழுக்கு வண்டிகளில் அவர்
வாழ்வு திளைத்திருக்கு

வெண் பனியில் மெய் எழுதிக்
கண், மூக்குக் காது வைத்துக்


www.tamilarangam.net

கையில் விலாறு எடுத்து நம்
கத்தரிக் கொல்லையிலே
காவல் இடும் சேவகன் போல்
பொம்மைப் பனியொன்று
புதிதாய் முளைத்திருக்கு

அலை மோதுங் கடலருகே
அண்டி வளர்ந்த பனை
செந்நெருப்பிற் போட்ட நிலம்
செழிப்பறியா இளம் பருவம்
இவை கண்ட என் உலகு
இங்கே பனித்திருக்கு

எப்போ இளவேனில்
சில வேளை இக்காலம்
நான் சிறக்கும் பொற்காலம்.

குளிர்காலம் 1994.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்ஜீரியாவில் ஜனநாயகம் :

# ஒரு இரத்தக் கனவு

வ . உமாகாந்தன்

அடுக்கடுக்காய் நடக்கும் படு கொலைகள் மூலம் அல்ஜீரியா உலக அரங்கில் அதிர்ச்சி அலைகளைப் பிரசவித்து வருகிறது. வெளி நாட்டுத் தொழிலாளர்கள், புத்திஜீவிகள், பத்திரிகை ஆசிரியர்கள், படப் பிடிப்பாளர்கள் என்றெல்லாம் பரவிய கொலைக் கரங்கள் இப்போது குழந்தைகளையும் கூட குண்டு வெடிப்புகளின் மூலம் கொல்லத் தொடங்கியுள்ளன. தினந்தோறும் சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்தி வரிசையில் அல்ஜீரியாவின் கொலைப் பட்டியல்கள் இப் போது இடம் பெறுகின்றன.

அல்ஜீரியாவில் நடக்கும் கொலைகள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையினால் சமீபத்தில் வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கை உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. அல்ஜீரியாவின் ஆயுதப் படையினருக்கும் அல்ஜீரியாவை ஒரு இஸ்லாமிய நாடாக மாற்றுவதற்காக ஆயுதப் போராட்டம் நடத்திவரும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் கடந்த மூன்று வருடங்களாக நடந்து வரும் மோதல்களில் இது வரை 20 ஆயிரம் பேர் கொல்லப் பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை கூறுகின்றது. அல்ஜீரிய அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட இது இரண்டு மடங்கு அதிகமானதாகும்.

அரச படையினருக்கும், இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடக்கும் மோதல்களை கிட்டத்தட்ட ஒரு யுத்தமாகவே கூறலாம் என்பது பலரது கணிப்பு. முகமூடியணிந்த கொலையாளிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீடுகளினுள்ளும், அலுவலகங்களினுள்ளும் புகுந்து கொல்வதும், மக்கள் கடத்தப் படுவதும், பாடசாலைகள் தீக்கிரையாக்கப் படுவதும் வீதித்தடைகளும் சோதனைகளும் நடத்தப்படுவதும் யுத்தத்தின் அங்கங்கள்தானே. ஆனால் இவற்றை செய்வது அரச படையினரா அல்லது தீவிரவாதிகளா அல்லது கூலிப்படையினரா என்பது யாருக்கும் தெரியாது. ஏனெனில் இந்த மூன்று தரப்பினருமே இந்தக் கொலை வெறியாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வன் முறைகளின் போது 600 பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 5 இலட்சம் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர். இது தவிர இன்னும் பல இரத்தத்தை உறைய வைக்கும் விடயங்கள் சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை விபரிக்கிறது. இவற்றில் பல இஸ்லாமிய தீவரக் குழுக்களால் நிகழ்த்தப்பட்டவையே. இத்தகைய ஒரு சம்பவத்தில் சட்ட விரோதமாக வரிவசூலிக்கும் ஒருவரின் தலை எதிர் இஸ்லாமியக் குழுவினால் வெட்டப்பட்டு அவர் வீட்டுக் குப்பைத் தொட்டியினுள்ளே போடப்பட்டிருந்தது. நான்கு நாட்களுக்குள் 80 தீவிரவாதிகளைக் கொன்று விட்டதாக இராணுவம் மார்தட்டுகின்றது. ஒரு வருடத்துக்குள் 70 வெளிநாட்டவர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச்சபை அதிகாரிகள் அல்ஜீரியாவுக்குச் சென்று மேற்கொண்ட ஆய்வுகளின்படி கொலை, சித்திரவதை, பயங்கரவாதம், நீதியற்ற விசாரணைகள் ஆகியவையே நாடுமுழுவதும் நீக்கமற நிறைந்திருக்கிறது. இங்கு நடைபெறும் பல பயங்கரங்களை உலகம் அறிவதில்லை. ஏனெனில் நாட்டின் பல பகுதிகளுக்கு உள் நாட்டு - வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் போவது தடை செய்யப் பட்டிருக்கிறது. கடந்த 18 மாதங்களுக்குள் 22 அல்ஜீரியப் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த சில நாட்களுள் கொல்லப்பட்டவர்களில் இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் நிராயுதபாணியாய் பேச்சு வார்த்தைக்குச் சென்ற இராணுவ நடவடிக்கைக்களுக்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி, ஸ்பெயினைச் சேர்ந்த இரு கன்னியாஸ்திரிகள், ஒரு பிரெஞ்சுப் பிரஜை, அரச வழக்கறிஞர் ஒருவர், பல்வைத்தியரான மொகமட் ரெதா அஸ்லவி, பிரபல பெண்ணுரிமை உறுப்பினரும் முன்னாள் அரசின் பிரதம பேச்சாளருமான அஸ்லவியின் கணவரே இவர். தலைநகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் தமது வீட்டின் முன் புரட்சிகர ஆபிரிக்கா என்னும் பத்திரிகையின் ஆசிரியர் ப்பரா ஸ்மின் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டார். நாட்டின் கிழக்குப் பகுதியில் எண்ணெய்க் கிணற்றுப் பகுதியில் இரண்டு ஐரோப்பியத் தொழில் நுட்ப்பவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் இலக்குகளாக அரச சேவையாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், சட்டத்தரணிகள், சிகை அலங்காரக்காரர்கள், அழகியலாளர்கள் மற்றும் பிரஞ்சுப் புத்தகங்கள் – பத்திரிகைகள் விற்பவர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமிய இரட்சண்ய முன்னணியின் பேச்சாளர் இந்தக் கொலைகளைப் பொறுப்பேற்க மறுக்கும் அதே வேளையில் இக் கொலைகள் நியாயமானவை எனக் கூறுகிறார். ஏனெனில் இத்தகையவர்கள் அப்பாவிகளின் எதிரிகள் என்றும் கூறுகிறார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை அல்ஜீரியாவில் மனித உரிமைகள் மீறப் படுவதை அனுமதிக்க மாட்டோம் என அறிக்கை விடுத்த அல்ஜீரிய ஜனாதிபதி லமின் ஸெருலுக்கு விழுந்த பேரடியாகும். அது மட்டுமல்ல திரு. லமின் ஸெருல் "தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை என்பது முடியாத காரியம்" என பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

www.tamilarangam.net

வன்செயல்கள் வாழ்வெங்கும் வியாபித்திருக்கும் இந்நிலையில் இன்னமும் ஜனநாயகத்தை விரும்பும் அரசியல் கட்சிகளும் மக்களும் விடிவுக்கு ஒரு மூன்றாவது பாதையைப் பற்றி சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்துள்ளார்கள். ஜனநாயகம் அல்லது மூன்றாவது பாதை என்பது பற்றி கட்சி அலுவலகங்களில் பரவலாகப் பேசப்பட்டாலும் இதற்கான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகச் சிலரே. இவ்வழியிலேயே அல்ஜீரியப் பத்திரிகைகளும் முன்னெடுப்புக்களை ஆரம்பித்துள்ளன.

ஹொசின் அயற் அகமட்டின் சோசலிச சக்தி முன்னணி (FFS), சையத் சாதியின் கலாச்சாரம் மற்றும் ஜனநாயகத்திற்கான முன்னணி (RCD), ஆகியவையே இந்த மூன்றாவது பாதை பற்றி வெளிப்படையாகப் பேசும் கட்சிகளாகும். அல்ஜீரியாவை நீண்ட காலமாக தனிக் கட்சியாக ஆண்ட தேசிய விடுதலை முன்னணியின் (FLN) முன் நாள் பிரதமர் மொகமட் ஹம்ரூச்சைத் தலைவராகக் கொண்ட சீர்திருத்தப் பிரிவும் இந்த மூன்றாவது பாதை குறித்த திரை மறைவு அரசியல் வேலைகளில் ஈடுபட்டுள்ளது. எத்தாடி ( முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி) போன்ற சிறிய குழுக்களும் இப்போது இந்த அணியில் சேர ஆரம்பித்துள்ளன. இஸ்லாமியத் தேசியவாதிகள் தேர்தலின் முதல் சுற்றில் வெற்றி பெற முன்னரே, 1991ம் ஆண்டில் FFS இன் பொதுச் செயலாளர் அயற் அகமட் இந்த மூன்றவது பாதைக்கான கோரிக்கையை முன் வைத்தார். கடந்த ஏப்ரல் மாதம் இந்தக் கோரிக்கை அவரால் முன்வைக்கப்பட்டது. இதன் அர்த்தம் இஸ்லாமிய அரசுமல்லாத பொலிஸ் அரசுமல்லாத ஒரு ஜனநாயக அரசொன்றை அமைத்தலேயாகும். ஆனால் இதை யார் வழி நடத்துவதென்பது பற்றி அவர் தெளிவாக எதுவும் கூறவில்லை.

சில வாரங்களின் பின் RCDயின் தலைவர் செயித் சாதி தனது முன்நாள் அரசியல் விரோதியின் மூன்றாவது பாதைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு இது குறித்து அவருடன் இரவோ பகலோ என் நேரமாயினும் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என அறிவித்தார். இந்த இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட இந்த உடன்பாடு அவர்களது ஆதரவாளர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுது. ஆனால் இந்த இரு தலைவர்களிடையேயான சந்திப்பு இதுவரை ஏற்படவில்லை என்பது ஒரு பலவீனமான அம்சம்.

இந்த மூன்றாவது பாதையை ஏற்றுக் கொள்ளாத நாட்டின் பலம் வாய்ந்த சக்திகளாகிய அல்ஜீரிய ராணுவமும், இஸ்லாமிய இரட்சணிய முன்னணியும் (FFS)இதற்கான முன்னெடுப்புக்களை இலகுவாக அனுமதிக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே இரு தரப்பும் தாம் நிகழ்த்திவரும் வன்முறை வெறியாட்டங்களை நிறுத்தும் வரை அல்ஜீரியாவின் ஜனநாயகம் குறித்த நோக்கு என்பது ஒரு இரத்தக் கனவே!



www.tamilarangam.net

எனது சோதரன்
ஒரு விமானியாகவிருந்தான்
ஓர் நாளினிற் கிடைத்தது
அவனுக்கொரு உலகப்படம்,
தன் பெட்டி படுக்கைகளைக்
கட்டிக் கொண்ட பின்னர்
தென் திசை வழியாகத்
தொடர்ந்ததவன் பயணம்.

வெற்றியாளன் என் சோதரன்.
எங்கள் மக்கள்
வாழ்வாங்கு வாழ்வதற்கு
போதிய நிலமிங்கு இல்லவே இல்லை
தமக்கென்றுவொரு[1] தரை
தாம் வாழப்பரப்பு நிலம்
எங்கள் பரம்பரையின்
நெடுநாட் கனவிது.

---

1 "ஜேர்மனியின் அயல் நாடுகளில் அதிகளவு நிலம் இருக்கின்றது, ஆனால் குறைந்தளவு மக்களே உள்ளனர் – Volk ohne Land, Land ohne Volk – ஜேர்மனியர் நிலம் போதாத மக்கள், அயல் நாட்டவர்கள் மேலதிக நிலம் கொண்டவர்கள்" என்ற கோஷத்தை முன் வைத்தே அடோல்ப் கிட்லர் தனது ஆக்கிரமிப்புகளை மேற் கொண்டான்


www.tamilarangam.net

*நிலப் பரப்பிற்காய்ப்*
*போரிடச் சென்றவன்*
*நீள் தொலைவிலெங்கோ*
*குவாடாமாமசிவில்[2]*
*நிலத் துண்டொன்றை*
*வெற்றி கொண்டான்*

*ஆறடி நீளமும்*
*ஐந்தடி ஆழமும்*
*கொண்டவத் தரையினைப்*
*போரிடச்சென்றவென்*
*சோதரன் வென்றான்.*

பேற்றோல்ற் பிறெக்ற்

தமிழில் : சந்துஷ்



---

[2] ஸ்பெயினிலுள்ள ஒரு மலைப் பிரதேசம்.

www.tamilarangam.net

# நடுத் தெருவில் இடர்ப்படோம்

– காத்ரின்

என் வயது 33
காத்ரின் என் பெயராகும்
இரு பிள்ளைகளின் தாய்
விவாகரத்து எடுத்தவள்
"வழமையான" வாழ்க்கையில் வெற்றியடைந்த பெண் நான்!

..........................................

ஆனால் கொஞ்சம் பொறுங்கள். இங்கே 'வழமையான' என்ற வார்த்தையின் அர்த்தந்தான் என்ன?
சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள், இலட்சியக் கனவுகள், சமூகத்தின் கனவுகளிற்கேற்ப எனது வாழ்வைத் தயார் செய்தல் – அது என்ன சமூகக் கனவுகள்? – அதுதான் இசைந்து கொடுக்கும் தன்மையும், துடிதுடிப்பும் கட்டான உடலும் உற்சாகமும் ( கைக்கடக்கமான பெட்டியில், உடைக்க, கடிக்க, நறும வசதியான ................ என்ற விளம்பரத் தொனி மாதிரி இல்லையா? )
இதில் கொஞ்சமும் மனிதத் தன்மை இருப்பதாய்ப் படவில்லை எனக்கு.

ஏன்?
அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

நானும் பேர்லின் மதிலும் 1961ம் ஆண்டுதான் தோன்றினோம்.
ஆம். நானொரு மதிலின் குழந்தை. அன்றும் பின்னர் நெடுங்காலமாகவும் அந்த மதிலுக்கும் எனக்குமான உறவை நான் சட்டை செய்யவில்லை. எனக்கும் எனது நண்பர்களுக்கும் தன்பாட்டில் நிற்கும் ஒரு மரமாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது இருந்து வந்தது.
ஏதோ விதமாக எங்களுக்கு வேறு சில விஷயங்கள் தெரிந்திருக்கவில்லை -- ஏதோவிதமாக எங்களுக்கு கவலைப்படவும் கவனிக்கவும் என்று வேறு பிரச்சனைகள், கனவுகள் இருந்தன.

---

**PLATTE** என்பது ஜேர்மனியில் வசிப்பிடமற்றோர் சார்பாக வெளியிடப்படும் சஞ்சிகைகளில் ஒன்று. பேர்லின் நகர சுரங்க இரயில்களில் பிரயாணம் செய்கையில் இந்தச் சஞ்சிகைகளை கூவி விற்கும் பல 'வீதியில் வசிப்பவர்களைச் சந்திக்கலாம். இவர்களில் அனேகமானோர் கிழக்கு மேற்கு ஜேர்மனிகளின் இணைவுக்குப் பின்னர் தொழிலையும் வீட்டையும் இழந்து நடுத் தெருவிற்கு வந்துவிட்ட கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலர் இருந்த வாழ்வையும் இழந்து புதிய வாழ்க்கையின் சுழற்சியுள் ஓட்ட முடியாதவர்கள் அல்லது ஓட்ட முயன்று தோல்வி கண்டவர்கள் - என்று பல்வேறு சுமைகள் அழுத்த வாழும் காத்ரினைப் போன்றவர்கள். மேற்கு பேர்லின் வாசிகளினதும், பொருளாதார ரீதியில் மேற் தட்டில் உள்ளவர்களினதும் முகச் சுழிப்புக்கள் மத்தியில் இவர்களின் சஞ்சிகை விற்பனை நடைபெறுகின்றது.
இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கமே இது.
**தமிழில் : சந்துஷ்.**

---

இலட்சியக்கனவுகள், அழகிய கனவுகள். காய்த்துப் பழுமாகாமல் பூவாகவே நிலைத்து விட்ட கனவுகள்.
நீங்கள் நம்புவீர்களோ இல்லையோ?

www.tamilarangam.net

நான் விழித்துக் கொண்டதும் பென்னம் பெரிய ஏமாற்றத்தைக் கண்டதும் 1989இல் தான்

இலட்சியக் கனவிற்கும் உண்மைக்கும் இடையில் இருந்த பெரிய பள்ளத்தாக்கினைக் கண்டதும் அப்பொழுதுதான்.

நான் ஒரு ஒலிபரப்பு நிலையத்தில் வேலை செய்தேன்.
செய்தி பரப்பும் அந்த அலுவலகத்தில் அமர்ந்து தொழில் புரிந்த போதுங்கூட எங்களது "முன்மாதிரிகளாக"விருந்த அரசியல் தலைவர்களின் ஊஎல் நடவடிக்கைகளையும் பிற செயற்பாடுகளையும் கவனிக்கத் தவறிவிட்டோம்.
ஆனால் ஒவ்வொரு செய்தி அறிக்கையின் போதும் அவர்களின் வேடங்கள் மெல்லக் கலைவதைக் கண்டோம்.

இன்னும் நான் நினைக்கின்றேன், நாங்கள் அப்போது விபரமும் கபடமுமற்ற குழந்தைகள் போல் இருந்தோம் என்று.
இன்னும் கூட நான் வளரவில்லையென்றுதான் இன்று நினைக்கின்றேன். பள்ளிக்கூடம், உயர்தரப்படிப்பு, பல்கலைக்கழகத்தில் தொடர்புத்துறை கற்றல் என்று DDR* இன் வழமையான சுற்று வட்டமும் தொழில் வாழ்க்கையுந்தான் எனதாகவும் இருந்தது. இந்தக் காலகட்டத்திற்தான் எனது இரண்டு பிள்ளைகளையும் பெற்றேன். நான் வேலை செய்தேன். பிரச்சனை இல்லாத வாழ்க்கை.-- ஒரு திருமணம் -- அதாவது உறுதி செய்யப்பட்ட பாதுகாப்பு. இந்தப் பாதுகாப்பின் ஒரு பக்கம் அழகானது. மறுபக்கம் மழுங்கிப் போனது.

நாங்கள் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் வறியவர்களாக இருந்ததை உணர்ந்தோம். ஆனால் எல்லோரும் சமமாக -- அப்படி இருந்தோம்.

---

* கிழக்கு ஜேர்மனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது இப்படியே தொடரும் என்றும் நாம் நினைத்தோம். என்னுடைய வங்கிக் கணக்கில் என்றும் பணம் இருந்ததில்லை. பயமும் இருக்கவில்லை. வாழ்க்கையில் சலிப்பு இருந்தது.

இந்தச் சலிப்பு என்னைக் குடிக்க வைத்தது.

எனது தேசம் நீரில் மூழ்கிய நேரம் எனது குடும்ப வாழ்க்கைக்கும் அதே கதி ஏற்பட்டது.

எனது காதலும், DDRம், இலட்சியங்களும் ஒரே நேரத்தில் உடைந்து போயின.

நான் விழித்த போது ஆழமான பள்ளத்தில் வீழ்ந்திருந்தேன். மனமும் உடைந்திருந்தது.

ஆனால் இப்படித்தான் இருக்க வேண்டும், இந்த வரையறை ஒழுங்கிற்றான் இயங்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்ட வாழ்வு முறைக்கு முடிவு காலம் வந்து விட்டது என்றும், நான் நானாக வாழும் வாழ்விற்கு இனி வழி பிறக்கும் என்றும், அவரவரின் தனித்துவங்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடும் என்றும் விபரமற்ற என் மனம் கருதத் தொடங்கியது. அப்பொழுதும் நான் குழந்தை போலிருந்தேன்.

"ஒவ்வொன்றினது இயல்பும் குணமும் என்றாவது வெளிப்பட்டே தீர்வதுதான் இயற்கையின் நியதி" என்று எனக்குச் சொன்ன என் தந்தையின் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன.

முதலில் எனது வேலையைத் தொலைத்தேன்.

ஆனாலும் வேலையற்ற நிலையை ஒரு அனுகூலமாகவே அன்றைய நாட்களில் நான் கருதினேன்.

அதுவரையும் நான் வாழ்ந்த மனதிற்கும் செயலிற்கும் சம்பந்தமில்லா ஏனோதானோ என்று பழக்கப்பட்டுவிட்ட இயந்திரத்தனமான வாழ்வினைத் தொடராமல் எதிர் காலத்தில் நான் விரும்பியபடிக்கு வாழும் வாழ்வின் பாதையைத் தீர்மானிப்பதற்கு நின்று நிதானித்துச் சிந்தித்து முடிவெடுக்கும் ஒரு நல்ல தருணமாக அந்தக்காலத்தை நான்

www.tamilarangam.net

கருதினேன்.

வேலையில்லாத அந்த ஒரு வருடம்.........................

மேற்கு பேர்லினைக் கொஞ்சம் கொஞ்சமாக நான் "வெற்றி" கொண்டதும் "மறுபுறத்தில்" வாழ்ந்த மனிதர்கள் எனக்கு அறிமுகமானதும் இந்தக் காலத்தில்தான். அப்போதெல்லாம் முன்னேறுமொரு போர் வீரனின் மனோ நிலையில் நானிருந்தேன்.

விண்ணப்பத்திற்கு மேல் விண்ணப்பமெழுதிய பின்னர், பன்னிரண்டு மாதங்கள் கழித்து, வேலை உருவாக்கும் திட்டத்தில் (ABM) என்னை இணைத்துக் கொண்டேன். பணம் படிப்படியாகக் குறைந்து கொண்டிருந்தது. இம் முறை எனக்குப் பயமாக இருந்தது.

இருந்தாலும் முன்னர் இருந்த உடைந்த மனநிலை இப்போதிருக்கவில்லை.

வேலை உருவாக்கும் திட்டத்தில் ஒரு வருடம் செயற்ப்பட்ட பின்னர் மீண்டும் வேலை செய்வதென்ற முடிவுக்கு வந்தேன். மீண்டும் தொழில் வாழ்க்கை. இம் முறை சுயமாகச் செய்யும் வேலை. இப்பொழுது தெளிவும் சுயபிரக்ஞையும் என்னிடம் இருந்தது.

நிர்ப்பந்தங்களின் இரைச்சல் நிறைந்த இந்த தொழிலுக்கு வந்து இரண்டு வருடங்களாகின்றன.

கனவுகள் என்னிடமிருந்து விடை பெறுகின்றன ஒருவித ஏமாற்றம் மிஞ்சுகின்றது. முன்னர் சமூகக்கனவுகளிற்காகத் தயார் படுத்தலில் போதிருந்த உற்சாகத்தின் தடயங்களைக் காணமுடியவில்லை.

நான் ஒலிபரப்புநிலையங்களுக்காக வேலை செய்கிறேன். இந்த வருமானத்தில் வாழ்க்கை ஓடுகிறது. ஆனால் எனது வேலை சிரமங்களும் சிக்கல்களும் கொண்டது. வேலைக்குத் தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதில் ஏற்படும் அழுத்தமும் அசதியும் மிகவும் சுமையானது. தவிர அரசு சார்ந்த அல்லது "வலது" சார்ந்த கருத்துக்களைத் தலையில் வைத்திருப்பவர்களுடன் வேலை செய்வதும் அவர்களினது அங்கீகாரத்தினைப் பெறுவதும்

www.tamilarangam.net

இருக்கின்றதே. என்னைப் போதும்,போதும் என்றாக்கிவிடுகிறது.
வேலையைப் பிரித்துக் கொடுக்கும் பொறுப்புக்களில் இருப்பவர்களின் போட்டி மனப்பான்மையும் எல்லையற்ற அவர்களின் அதிகாரமும் எனக்கு சோர்வும் விரக்தியும் அளிக்கின்றன. என்னைப் பயம் சூழ்ந்து கொள்கிறது.

மேலதிகாரிகளை ஒரு நாளும் பகைக்க வேண்டாம். அவர்கள் எண்ணுவதை அப்படியே நிறைவேற்றத் தக்கதாய் அவர்களைப் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை விடுமுறை எடுக்காமலிருக்கவும் நோய்வராமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். உனக்குப் பிள்ளைகள் இருப்பின், அது உனது வேலையைப் பாதிக்காதவகையில் நடந்து கொள்ள வேண்டும். ஆடம்பரமாக உடுக்க வேண்டும். இவற்றைக் கடைப் பிடிப்பது மாத்திரமல்ல, நீ உக்கிரமான முறையில் வளைந்து கொடுக்கவும் விட்டுக் கொடுக்கவும் உன்னைத் தயார் செய்தல் வேண்டும்.

இத்தனையும் செய்தாலே நீ "மேலே" நிலைத்திருக்க முடியும். கவனம். கீழே பெரும் பள்ளம் காத்திருக்கின்றது. வீழ்ந்தாயோ அவ்வளவுதான்.
இப்படியே என்றுமிருக்கப் பிடிக்கவில்லை எனக்கு. இந்தச் சூழ்நிலையும், நிர்ப்பந்த வாழ்வும் எனக்குப் பெருஞ்சுமையாக உள்ளன. என்னை அழுத்துகின்றன.

" வா காத்ரின் வா. வந்து கொஞ்சம் குடி பெண்ணே."
"கொக்நாக்"யையும் பியரையும் போல் நித்திரைக்குதவுவது வேறெதுவுமில்லை. வா வந்து குடி." என்ற குரல்கள் கேட்கின்றன.
"ம் ம் .............. மாட்டவே மாட்டேன். இந்தக் காத்ரின் இனிக் குடிக்க மாட்டாள்.

மூளையை மந்தமாக்கி நடைப்பிணமாக்கிவிடும் மதுவினுள் அவள் விழவே மாட்டாள். முன்னரைப் போல் எளிதில் பாதிப்படையும் மனமெனக்கு இப்போதில்லை.
எனதுண்மையான உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் இப்பொழுது என்னால் முடியவில்லை. இந்த உலகிற்கேற்ப என்னைத் தயார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யாமல் வாழவும் முடியவில்லை.

ஒருவாறாக நான் என்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளேன். அதுவும் ஒரு வித பயத்துடன்தான். பிள்ளைகளுடன் தெருவில் போய் நிற்க நான் தயாராகவில்லை.


ஆனால் இப்போதெல்லாம் அதை விரைவில் நடைபெறக்கூடியவொன்றாக என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.
எல்லாமே எவ்வளவு விரைவில் நடந்து முடிந்து விடக் கூடியன என்று இப்போது நானறிவேன்.
ஒரு புற நடையாக "வித்தியாசமாக" விரும்பியபடி இருக்க முன்னர் நாங்கள் அனுமதிக்கப்படவில்லை.
இன்று இங்கு கூட அதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு அல்லது இல்லை.
தன்னைத்தானே நேசிப்பதில் சுகங்கண்டு வாழும் வித்தியாசமான வாழ்விங்கு.
நான் இன்னும் பயின்று கொண்டிருக்கின்றேன்.



www.tamilarangam.net

சுதந்திர வர்த்தக வலையத்தில்

# பெண்கள்



கட்டுநாயக்கா ஏற்றுமதித் தயாரிப்பு வலையத்தில் ( சுதந்திர வர்த்தக வலையத்தில்) தொழில் செய்யும் பெண்கள் ஒரு தனித்துவமானவர்கள் என்று இனங்காண முடியாது. அவர்கள் ஸ்ரீலங்கா சமூகத்தில் அதன் விருப்பு வெறுப்புக் களுடன் வளர்ந்தவர்கள். பொதுவாக பாரம்பரியமான பின்னணிகளைக் கொண்ட கிராமிய குடும்பங்களிலிருந்தே இந்த இளம் பெண் தொழிலாளர்கள் வருகிறார்கள். அப்படியானால் இவர்கள் எப்படி தாம் வளர்க்கப்பட்ட பாரம்பரிய ஸ்ரீலங்கா சமூகத்தினின்றும் வேறுபட்ட தன்மைகளை வெளிப்படுத்தும் சமூகத்தட்டாக உருவாகியுள்ளார்கள்? அவர்களுடைய பாரம்பரிய கலாச்சாரத்திற்குப் பதிலாக ஒரு உபகலாச்சாரம் அவர்கள் மத்தியில் உருவாவதற்கான காரணம், இந்த இளம் பெண் தொழிலாளர்கள் தொழில் செய்யும் மற்றும் வாழும் சூழல்களில் உள்ள பிரச்சனைகளும் அவற்றை எதிர் கொள்ளவும் சமாளிக்கவும் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவுகளே என நாம் ஊகிக்கின்றோம்.

அவர்களுடைய பிரச்சனைகளை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

www.tamilarangam.net

சுதந்திர வர்த்தக வலையத்தைச் சூழ உள்ள பிரதேசத்தில் பால் விகிதத்தை பாரதூரமாக மாற்றும் விதத்தில் அதிகமான இளம் பெண்கள் குடியேறியுள்ளமை ஒரு முக்கியமான விடயமாகும். சுதந்திர வர்த்தகப் பிரதேசத்தில் சுமார் 70,000 இளம் பெண்கள் குடியிருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. 18 – 25 வயதிற்குட்பட்ட இப் பெண்களில் 10 %மானோரே விவாகமானவர்கள். இவர்களிற் பெரும் பான்மையினர் விடுதிகளில் வாடகை அறைகளில் குடியிருக்கின்றனர். ஆரம்பத்தில் சுதந்திர வர்த்தக வலையத்திற்கு அவசியமான தொழிலாளர்கள் அண்மையிலுள்ள கிராமங்களிலிருந்து பெறப்பட்டாலும் தற்பொழுது அனுராதபுர, மாத்தறை, பதுளை ஆகி இடங்களைச் சேர்ந்த பெண் தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள்.

---

கலாநிதி. ஹெட்டியாராச்சி Economic Review பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு.

---

இதன் விளைவாக இப் பெண்கள் தமது பெற்றோருக்கு உதவ சிறிது பணம் அனுப்பிக் கொண்டிருந்தாலும் அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்க முடியாத நிலைமைகளிலேயே உள்ளனர். இப் பெண்களுக்குக் கிடைக்கும் வருடாந்த விடுமுறைகள் மிகச் சொற்பமாக இருப்பதால் தமது குடும்பங்களைச் சந்திப்பதற்கு ஒரு வருடத்தில் ஒருதரமாவது தமது கிராமங்களுக்குச் செல்ல முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

அனேகமாக சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலைக்கமரும் முதற் சில வருடங்களில் தொழிலாளர்கள் ஆறுமாத தற்காலிக அடிப்படையிலேயே வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள். இந்த நிலைமையில் சிலர் ஆறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாதங்களின் பின்பும் வைக்கப்படுகின்றனர். சிலர் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர். வேலையிலிருந்து நீக்கப்படுபவர்கள் வேறு இடங்களில் வேலைக்கமர்த்தப்படும் பொழுது மீண்டும் தற்காலிகமாகவே வேலை செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இதனால் இந்த இளம் பெண்களுக்கு தமது பெற்றோரையும் குடும்பங்களையும் பார்க்கும் சந்தர்ப்பங்களே இல்லாது போகின்றது.

மறுபுறத்தில் இந்தப் பெண்களின் பெற்றோர் மிகவும் ஏழ்மையான நிலமைகளில் வாழ்வதால், தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு, வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரு முறை மட்டுமே செல்ல முடிகின்றது. இதன் விளைவாக பெற்றோரின் குடும்பத்திற்கும் இந்தப் பெண்களுக்குமிடையிலான உறவுகள் அருகிவிடுகின்றன. இத்துடன் இந்தப் பெண்கள் தொழில் புரிவதற்கும் வாழ்வதற்கும் வந்த புதிய சூழல்களிலும் அவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை.

அவர்களுடைய விடுதிகளில் அவர்கள் ஆடு மாடுகள் போல் அடைபட்டுக் கிடக்கின்றனர். தொழிற்சாலைகளில் உணர்வற்ற இயந்திரங்களாக அடைய முடியாத உற்பத்தி இலக்குகளை அடைய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வெளியிலுள்ள சமூகமும் அவர்களை இழிவாகவே நோக்குகின்றது. அவர்களுடைய பலவீனமான நிலமைகளைத் தமக்குச் சாதகமாகவே பயன்படுத்த முயற்சிக்கின்றது. பொது மக்களிடம் இவர்கள் பெறும் அவமதிப்புக்கள் கொஞ்சமல்ல. "ஜூக்கி கெல்லி * , "படு கெல்லி", "மெஷின் கெல்லி" என கேலியாக அழைக்கப்படுகின்றனர்.

தொழில் செய்யும் இந்தப் பெண்கள் இந்த நிலமைகளுக்கு வேவ்வேறு விதமாக முகம் கொடுக்கின்றனர். ஆரம்ப காலங்களில் பெரும்

---

* கெல்லி = பெட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனக்கிலேசங்களுக்குள்ளாகும் பெரும்பான்மையினர் சக தொழிலாளர்களினால் ஆறுதல்படுத்தப்படுகின்றனர். ஆனால் காலப் போக்கில் இவர்கள் தமது புதிய சூழல்களுக்குத் தம்மைப் பழக்கப் படுத்திக் கொள்ளுகின்றனர். இந்தப் புதிய சூழ்நிலமைகளுக்குத் தம்மைப் பழககககப்படுத்திக் கொள்ளும் தன்மைகளே அவர்களின் மனோநிலைகளிலும் நடைமுறைகளிலும் பாரியமாற்றங்களை ஏற்படுத்துவதுடன் ஒரு உப கலாச்சரமாகவும் பரிமாணம் பெறுகின்றது. தம்மை இந்த நிலமைகளுக்குத் தள்ளிய சமுகத்தைப் பழிவாங்கும் மனோ வைராக்கியம் இந்த உபகலாச்சாரத்தின் ஒரு முனையாகும்.

தொழில் செய்யும் இடங்களில் இவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பல: அடைய முடியாத உற்பத்தி இலக்குகள்,.
மேற் பார்வையாளர்களிடம் பெறும் ஏச்சுக்களும் அடி உதைகளும், முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், ஆண் தொழிலாளர்கள் ஆகியோரின் பால்ரீதியான பலாத்காரங்கள், அவசர உற்பத்தியை முடிப்பதற்கு இரவு வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுதல் – இவை அவர்கள் தொழிற்சாலையில் சந்திக்கும் பிரச்சனைகள்.

இளம் பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலிருந்து தமது விடுதிகளுக்குச் செல்லும் பாதைகளில் அவர்களுக்கு எந்த விதப் பாதுகாப்பும் இருப்பதில்லை. தொழிற்சாலைகளில் வேலை ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கு முடிவடைகின்றது. ஆனால் பெரும் பான்மையான பெண்கள் தமது குறைந்த சம்பளங்களை நிறைவு செய்ய இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலை செய்கின்றனர். அதிகமான தொழிலாளர்களுடைய 20%மான வருமானம் மேலதிக நேர வேலையினாலேயே கிடைக்கின்றது என புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. மேலதிகநேர வேலை முடித்து இரவு எட்டு மணியளவிலேயே பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்றனர். பெருஞ்சாலைகளில் விளக்கேற்றப் பட்டிருந்தாலும் விடுதிகளுக்குச் செல்லும் சிறு பாதைகள் இருள் மண்டியவை.

www.tamilarangam.net

இப்பாதைகளில் பெண்கள் பெரும்பாலும் பலாத்காரப் படுத்தப்படுகின்றனர்.

ஆண்கள் மேற்பார்வையாளர்களாக இருக்கும் தொழிற்சாலைகளில் தொழில் செய்யும் பெண்கள் பலவிதமான அழுத்தங்களுக்கும் உள்ளாகின்றனர். இப் பெண்களுடைய உதவியற்ற நிலமைக்கும் நிர்வாகத்தின் மிரட்டல்களுக்கு அஞ்சிப் போகும் நிலமைகளுக்கும் அடிப்படையான காரணம், சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழிற் சங்கங்கள் இல்லாமையேயாகும். சட்டத்தில் எழுதப்படாவிட்டாலும், நடைமுறையில் சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

பாரம்பரிய தொழிற்சங்கங்கள் சுதந்திர வர்த்தக வலையத்தில் அமைப்பாவதற்கு எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அவைகள் இத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கு இருக்கும் தடைகளை எதிர்க்கும் நடவடிக்கைகளை தீவிரமாக எடுக்கவுமில்லை. இதை ஒரு பெரும் பிரச்சனையாகவும் அவர்கள் கொள்ளவில்லை. பாரம்பரியத் தொழிற் சங்கங்கள் இப் பெண் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதில் காட்டிலும் தேசிய அரசியல் வாதிகளுக்கு ஆதரவு காட்டுவதை தமது முக்கிய கடமையாகக் கொண்டனரோ தெரியவில்லை? இந்த நிலமைகளினால் சுதந்திர வர்த்தக வலையத்திலுள்ள கல்வியறிவு பெற்ற தொழிலாளர்கள் மத்தியிலும் கூட தமது உரிமைகள் பற்றிய உணர்வு குறைவாகவே இருக்கின்றது. தொழிற்சாலைகளில் தாம் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கான தொழிற்சட்டங்கள் உள்ளன என்பதை சுதந்திர வர்த்தக வலையத்தில் உள்ள தொழிலாளர்களில் அரைவாசிக்கும் குறைந்த தொகையினரே அறிந்துள்ளனர்.

இதன் விளைவாக, எந்த நேரமும் தமது வேலை பறிபோய்விடலாம் என்ற பயமே, தொழிற்சாலையில் இந்தத் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகின்றது.

www.tamilarangam.net

பலவிடங்களில் தொழிலாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் கொடுக்கப்படுவதில்லை, இதனால் நிர்வாகம் அவர்களை எந்த வேளையிலும் வேலையிலிருந்து நீக்க முடிகின்றது. இந்த நிலமைகளில் பெண் தொழிலாளர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் பொழுது வேலையைவிட்டு வேறு வேலை தேடவேண்டி ஏற்படுகின்றது அல்லது ஆண் மேற்பார்வையாளர்களின் மிரட்டல்களுக்கு அடிபணிய நேரிடுகின்றது.

மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆண் தொழிலாளர்கள் ஆகியோரினால் பால்ரீதியான பயமுறுத்தல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பெண் தொழிலாளி ஒரு "ஆண் நண்பனை"த் தேடிக் கொள்வது ஒரு வழி முறையாக இருக்கின்றது. ஆயுதப் படையிலுள்ள பல ஆண்கள் இந்த "ஆண் நண்பன்" பாத்திரத்தில் இருப்பது இந்தப் பெண்களின் பாதுகாப்புத் தேவையை மேலும் வலியுறுத்துகின்றது.

முகாமையாளர்கள், உப முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் பெண் தொழிலாளர்களைத் தமது கைப்பிடியில் வைத்திருப்பதற்கு மேலதிக நேரவேலை என்ற ஆயுதத்தைப் பாவிக்கின்றனர். எல்லாத் தொழிலாளர்களும் தமது குறைந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கு மேலதிக நேர வேலை செய்வதை விரும்புகின்றனர். ஆனால் தொழிற்சாலைகளில் மேலதிக நேர வேலை எப்பொழுதும் இருப்பதில்லை. சில சமயங்களில் ஏற்றுமதிக் காலகெடுக்கடுளை முடிப்பதற்கு அதிக மேலதிக நேர வேலை அவசியமாகலாம். மற்றைய சமயங்களில் சகல தொழிலாளர்களின் விருப்புகளையும் பூர்த்தி செய்யக் கூடிய அளவு மேலதிக நேர வேலை இல்லாது போகலாம்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நிர்வாகம் மேலதிக நேர வேலையை ஒரு ஆயுதமாகவே பாவிக்கின்றது: அவசியம் ஏற்படும் போது அவர்களால் அதிகமான மேலதிக வேலையை அவர்கள் மீது திணிப்பது மற்றது அவர்கள் விரும்பும் போது மேலதிக நேரத்தைக் குறைப்பது

www.tamilarangam.net

அல்லது இல்லாமல் செய்வது. இதனால் தொழிலாளர்கள் தமது வேலையைப் பாதுகாப்பதற்கும் தேவையான பணத்தைச் சம்பாதிப்பதற்கும், எப்பொழுதும் நிர்வாகத்தின் விருப்புகளுக்கேற்பவே செயற்பட வேண்டியுள்ளது.

சுருங்கக் கூறுவதாயின்: கட்டுநாயகா சுதந்திர வர்த்தக வலையத்தில் குவிந்துள்ள 18 – 25 வயதிலான 70,000 மிகவும் வறுமைப்பட்டுள்ள இளம் பெண் தொழிலாளர்கள், தமது குடும்பங்களுக்கும் ஓரளவு உதவுவதற்காகவும், தமக்ககாகவும், ஆடுமாடுகள் போல விடுதிகளுள் அடைபட்டு, தொழிற்சாலைகளில் பத்து மணித்தியாலங்களுக்கு மேலாகவும், அவசியமானால் இரவு நேரங்களிலும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு, தொழிற்சாலை நிர்வாகங்களினால் பொருளாதாரரீதியாகவும் சரீரரீதியாகவும சுரண்டப்படுகின்றார்கள்.

மறுபுறத்தில் அதிகளவிலான இந்த இளம் பெண் தொழிலாளர்களின் குவிப்பானது சுதந்திர வர்த்தக வலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் வாழும் மக்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை ஆராய்வோம். சுதந்திர வர்த்தக வலையத்தில் நடைபெறும் இந்தச் சுரண்டலுக்கு எதிராக அப்பகுதி மக்கள் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி எழலாம் . இதற்கான பதிலும் ஆச்சரிப்படக் கூடியதொன்றல்ல. கட்டுநாயக்காவில் சுதந்திர வர்த்தக வலையத்தைச் சூழ உள்ள மக்கள் இத் தொழிலாளர்களினால் பெரும் பொருளாதார நன்மைகளைப் பெற்றுள்ளார்கள்.

சுதந்திர வர்த்தக வலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் 1200 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் தங்கும் விடுதிகள் இருந்ததாக 1989ல் கணக்கிடப்பட்டுள்ளது. வேலைசெய்யும் பெண்களுக்கு விடுதிகள் நடத்துவது, இப்பிரதேசத்தில் முக்கியமான வருவாய்தரும் நடவடிக்கையாக உள்ளது. 1990ல், பெண் தொழிலாளர்களுக்கு தூங்குமிடவசதி மட்டும் கொடுத்து ஒரு விடுதி மாதமொன்றிற்கு

www.tamilarangam.net

ரூ.6000 வாடகையாக பெறக் கூடியதாக இருந்தது.

விடுதிகள் மட்டுமல்ல, சந்தைகள், கடைகள், மலிவான சாப்பாட்டுக் கடைகள், பலசரக்குக் கடைகள், தையற்கடைகள், மற்றும் பல தொழில் முயற்சிகள் இப் பெண் தொழிலாளர்களின் தேவைகளை மையப்படுத்தி உருவாகியுள்ளன. விடுதிகளின் தேவை அதிகரிப்பதனால் கட்டடத் தொழில் வளர்ச்சி தொடர்கின்றது. இன்னொரு புறத்தில் ஒவ்வொரு வார முடிவிலும் நடைபெறும் சங்கீத நிகழ்ச்சி போன்ற பொருளாதார நடவடிக்கைளும் இடம்பெறுகின்றன.

இன்று சுதந்திர வர்த்தக வலையத்தில் ஒரு சாதாரண தொழிலாளியின் சம்பளம், மேலதிக நேர வேலை உட்பட சுமார் ரூ.2000 மாகும். உத்தியோக பூர்வமான கணிப்பீடுகளின் படி சுதந்திர வரத்தக வலையத்தில் இன்று 70,000 தொழிலாளர்கள் தொழில் புரிகின்றார்கள். இந்தப் பெண் தொழிலாளர்கள் இப்பிரதேசத்தில் வேலை செய்வதால் ஒரு மாதத்திற்கு ( 2000 X 70000 = 140,000,000 ) 140 மில்லியன் ரூபா பெறுமதியான பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றார்கள். இப் பெண்களில் மூன்றில் ஒரு பங்கினர் தமது வருமானத்தில் 20% மான பகுதியை தமது குடும்பங்களுக்கு அனுப்புவதாகக் கூறப்படுகின்றது. அப்படியிருப்பினும் ஒரு மாதத்திற்கு 120 மில்லியன் ரூபா இந்தப் பிரதேசத்திலேயே செலவிடப்படுகின்றது.

இப்பிரதேசத்து மக்கள் இத் தொழிலாளர்கள் மூலமாக பெறும் பொருளாதார நன்மைகளை நிரூபிக்க இதைவிட வேறு புள்ளி விபரங்கள் தேவையில்லை. சுதந்திர வர்த்தக வலையத்தைச் சூழவுள்ள பிரதேசங்களுக்கும் நாட்டின் மற்றைய பிர தேசங்களுக்குமுள்ள பொருளாதார வேறுபாட்டை நேரில் கண்களினால் பார்ப்பவர்கள் எவரும் இதைப் புரிந்து கொள்வார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் இப்படியான பொருளாதார நன்மைகளைப் பெறும் இப்பிரதேச மக்கள், சுதந்திர வர்த்தக நிலையத்தில் வேலை செய்யும் பெண்களை சுயநலமும் வெறுப்பும் கலந்த கண்களுடனேயே பார்க்கின்றனர். தங்களுடைய பொருளாதார நலன்களுக்காக இப் பெண்கள் இப் பிரதேசத்தில் இருப்பதையும் இன்னும் பலர் வருவதையும் அவர்கள் விரும்புகின்றார்கள். அதே வேளையில் அப் பெண்கள் அப்பிர தேசத்தில் உலாவுவதையும் அவர்களின் நடவடிக்கைகளையும் கண்டனம் செய்கிறார்கள். அவர்கள் கட்டுப்பாடற்ற பழக்க வழக்கங்களை தமது பிர தேசத்திற்குக் கொண்டு வருவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். இப்படியான குற்றச்சாட்டுக்கள் பகிரங்கமாகவும் தனிப்பட்ட உரையாடல்களின் போதும் வெளிப்படுகின்றன.

இப்பிரதேச மக்கள் இவர்களைக் கண்டிப்பதற்குக் கூறும் காரணங்கள் பல வகைப்பட்டவையாகும். இவற்றுள் முக்கியமானது இப்பெண்கள் தமது ஆண் நண்பர்களுடன் தகாத முறைகளில் பழகுவதாகவும் இது இப் பிரதேசத்தில் வாழும் தமது பிள்ளைகளைப் பாதிக்கின்றது எனவும் குற்றம் சாட்டுகின்றனர். வளர்ந்த பிள்ளைகள் உள்ள பிரதேச மக்கள் இக் குற்றசாட்டை வைக்கின்றனர். இந்த வெறுப்பு, அவர்கள் தமது பெண் பிள்ளைகளை ஏசும் பொழுது வெளிப்படுகின்றது. " கலாப்பே கெல்லோ வகே கிசெறனவா" ( வர்த்தக வலையப் பெண்கள் போல நடந்து கொள்ளுகிறாய் ) என ஏசுகிறார்கள். ஒரு பெண் எதிர் காலத்தில் சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலை செய்வதை மிகவும் தாழ்ந்த ஒரு நிலமையாக அவர்கள் கருதுகின்றார்கள். தமது பெண் பிள்ளைகள் கல்வியில் பின் தங்கும் போது " காலாப்பயற்ற பலயல்லா " – "வர்த்தக வலையத்திற்குத்தான் நீ போவாய்" என்று ஏசுகிறார்கள்.

இவ்வாறான மனோபாவங்களினால் விடுதிகளை நடத்தும் வீட்டுக்காரர்கள் தமது குடியிருக்கும் பகுதிகளையும் பெண்கள் குடியிருக்கும் விடுதிப் பகுதியையும் வெவ்வேறாகவே வைத்துக் கொள்ளுகின்றனர். சில சமயங்களில் தடைச் சுவர்களையும் கட்டிக்

www.tamilarangam.net

கொள்ளுகின்றனர். பணக்கார விடுதிச் சொந்தக்காரர்கள் தமக்கென வேறு வீடுகளையும் கட்டிக் கொள்ளுகின்றனர். இப்படியாக தொழில் செய்யும் பெண்கள் வேண்டாத விருந்தினர்களாகவும் அதே வேளையில் அவர்கள் தரும் பொருள் வருவாயினால் மிகவும் வேண்டப்படுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

தொடர்ந்து அதிகரித்து வரும் தொழிற்சாலைகள் விடுதிச் சொந்தக்காரர்களுக்கு நன்மை தருவதாகவே இருக்கின்றது. விடுதிகளுக்கான தேவை வளங்கலுக்கு அதிகமாகவே இருக்கின்றது. இது விடுதிகளின் வாடகை சம்பந்தமான பேரம் பேசலில் விடுதிச் சொந்தக்காரருக்கு இலாபத்தையே அளிக்கின்றது.

மேலும் அதிக இளம் பெண்கள் வசிக்கும் இப் பகுதியில் அவர்களுக்கு அவசியமபன ஆரோக்கிய மற்றும் வைத்திய வசதிகள் இல்லையென்றே சொல்லலாம்.

இவை யாவும் இப் பெண் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளாகும்.

- தொழிலகங்களிலும் வெளியிலும் பெண் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு.
- தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தொழிற்சட்டங்கள்.
- வைத்திய வசதிகளும் அது தொடர்பான கல்வியும்.

ஆகியவை இன்று மிக அவசியமான நடவடிக்கைகளாக இருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

<u>திரைப்பட விமர்சனம்</u>

# பம்பாய்

அண்மையில் "பம்பாய்" தமிழ்த் திரைப்படம் பார்த்தேன்.

"எந்தவொரு கலைப்படைப்பையும் மாத்திரமல்ல, உன்னுடைய டயறியைக் கூட முன் கற்பிதங்களைக் கலைத்துவிட்டுப் பார்" என்பதனை என் வாழ்வில் முடிந்தவரை முயற்சி செய்து வருகிறேன்.

தமிழ் நாட்டின் நெல்லை மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் வாழ்ந்து வரும் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த சகிராபானுவை அதே கிராமத்திலிருக்கும் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த – பம்பாயிலிருந்து விடுமுறையில் வந்திருந்த – சேகர் காதலிக்கிறான். அவளும் விரும்புகிறாள். காதலர்களின் தந்தையாரிருவரும் தத்தமது மதத்தில் தீவிரம் கொண்டவர்கள், இருவரது முரட்டுப் பிடிவாதத்தையும் கண்ட இளைஞன் தன் காதலிக்கு பாம்பாய் வர டிக்கட் வாங்கிக் கொடுத்தவிட்டு பம்பாய் பயணமாகின்றான். வீட்டைவிட்டு வெளியேறும் காதலி பம்பாயில் அவனைத் திருமணம் செய்கிறாள். தத்தம் மதங்களைத் தூக்கிப் பிடிக்கும் இவர்களது தந்தையர்கள் கிராமத்தில் தமக்குள் சீண்டிக் கொண்டிருக்க பிள்ளைகள் பம்பாயில் இரு பிள்ளைகளைப் பெற்று

www.tamilarangam.net

மகிழ்வுடன் வாழ்கின்றார்கள்.

1992 டிசம்பரில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதின் எதிரொலியாக பம்பாய் இனக்கலவரங்களினால் எரிகிறது. கலவரங்களில் சகிராபானுவும் சேகரும் பிள்ளைகளும் சிக்கி மயிரிழையில் உயிர் தப்புகிறார்கள்.

இரு பக்க மதவெறியர்களும் பிள்ளைகளை முஸ்லீமா இந்துவா என்று கேட்கும் கேள்வி அவர்களது மனநிலையில் பூதாகரமான அடியாக விழுகிறது. மதத் தலைவர்களினால் தூண்டிவிடப்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்படுவது சாதாரண மனிதர்களும் அவர்களுடைய உறவுகளும், உணர்வுகளும், மனநிலையும் என்று சித்தரிக்கப் படுகின்றது. இரு பக்கத்திலுள்ள கும்பல்களே கொலைகளில் ஈடுபடுவதையும் சாதாரண மட்டத்தில் இந்துக்களை முஸ்லிம்களும் முஸ்லிம்களை இந்துக்களும் வெறியர்களிடமிருந்து காப்பாற்றிய உண்மை படத்தில் வருகிறது.

கலவரம் என்று கேள்விப்பட்டு பிள்ளைகளைப்பார்க்க வரும் இரு பெற்றோரில் நாராயண்பிள்ளையை முஸ்லிம் வெறியர்களிடமிருந்து தனது சகோதரன் என்று சொல்லிக் காப்பாற்றுகிறார் பாசீர்பாய். தந்தையர் இருவரின் பாத்திரங்களும் பிள்ளைகளின் பாத்திரமும் இங்கு குறியீடுகளாகவே வருகின்றன எனத் தோன்றுகிறது. இரண்டாம் முறையாகவும் கலவரம் வெடிக்கும் பொழுது இரு பிள்ளைகளும் வழி

மாறுகின்றனர். பேரர்கள் எரியும் வீட்டில் அகப்பட்டு இறக்கின்றனர். பிள்ளைகளைத் தேடிச் சித்தப் பிரமை பிடித்தவர்களாய் எரியும் பம்பாயில் சகிராபானுவும் சேகரும் அலைகின்றனர். கொலை வெறியர்களிடம் சாதாரண முஸ்லிம்களும் இந்துக்களும் எதிர்வாதிடுகின்றனர்.

ஈற்றில் கொலை வெறியர்கள் ஆயுதங்களைக் கீழே போடுவதும் தாம் தூண்டிய மதக் கலவரங்களினால் மடியும் மனிதர்களையும் எரியும் நகரத்தையும் நேரில்க் கண்டு அதன் ரணங்களை உணரும் மதத்தலைவர்களும் மணிரத்தினத்தின் அவா அல்லது கனவு.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பங்களாதேசிலும் கலவரம் வெடித்த பொழுது அங்குள்ள சிறுபான்மை இந்துக்களைப் பற்றியும் இதயமற்ற மதவெறியையும் தஸ்லீமாநஸ்றீன் நாவலாக்கிய போது அந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தின் உணர்வுகளையும் இரண்டு இனங்களையும் சேர்ந்த ஆண்களின் உணர்வுகளுக்கு இடையில் நசிபடும் பெண்ணின் உணர்வுக்கும் முக்கியம் கொடுக்கப் பட்டிருந்தது. மணிரத்தினம், மனிதர்கள் மதப் பூசல்களினால் பிளவு படுவதை தேச ஒருமைப் பாட்டை வலியுறுத்துவதின் மூலம் எதிர்க்கிறார். இவரது இலட்சியமாக இருப்பது ஒற்றுமையான இந்தியா என்பது ஒருபுறமிருக்க இந்து முஸ்லீம் என்ற இரு பக்க இன வெறிகளையும்

www.tamilarangam.net

குறியீடாக்கும் அவர் பொலிசை நடுநிலமைச் சக்தியாக காட்டுகிறார். அல்லது எதிர்பார்க்கிறார். அயோத்திக் கலவரங்களின் போது அப்பாவி மக்கள் மீதான பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் நூற்றுக் கணக்கானோர் மடிந்தனர். பத்திரிகையாளரான சேகருக்கு பொலீஸ் கமிஷனருக்குமிடையிலான உரையாடலில் இந்த கொலைகள் பற்றிக் குறிப்பிடப் படுகின்றது எனினும் பொலிசார் உயிரைப் பாதுகாப்பதில் ஈடுபட்டனர் என்று காட்டுவதன் மூலம் முன்னையதின் அழுத்தம் குறைகின்றது. இரண்டு இனவாதங்களினதும் குரூரத் தன்மையையும் குறியீடாக்கிய அளவு இதை மழுப்பியிருப்பதால் உண்மை முற்றாக மறைக்கப் படுவது உறுத்தலாக இருக்கின்றது.

அயோத்திக் கலவரங்களின் போது இந்து முஸ்லீம் என்று பலரை "அலி" என அழைக்கப் படுபவர்கள் காப்பாற்றினார்கள். படத்தில் இது சித்தரிக்கப்பட்டிருப்பது சந்தோஷமான விஷயந்தான். ஆனால் ஒரு காட்சியில் இத்தகைய ஒரு மனிதரினால் காப்பாற்றப்படும் சிறுவன் " நான் இந்துவா முஸ்லீமா ?" என்று அவரை வினவுகையில் " என்னைப் போல் இரண்டும் கெட்டானிடம் இதைக் கேட்கிறியே" என்று பதில் வருகிறது. அலிகளை சமூகத்திலிருந்து அந்நியமாக்கிப் பார்க்கும் இழிவான பார்வைக்கும் அவர்களை நகைப்புக்குரிய பொருட்களாக்கும் சராசரி இயல்புக்கும் தீனி போடுபவையாக இந்த வசனங்கள் எனக்குப் பட்டன.

www.tamilarangam.net

படத்தின் இன்னுமொரு உறுத்தல் இது.

மென்மையான மனித உணர்வுகள் மிகைப் படுத்தலின்றிச் சித்தரிக்கப்படும் அழகியல் மணிரத்தினத்தின் படத்தில் இடம் பெறுவதன்று. சுருக்கமான வசனங்கள், இயற்கையான நடிப்பு இவற்றைக் கொண்டு இந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் அழகியல் மெல்லிதாக இதயத்தை வருடுவது இவரது சிறப்பு.

வாழ்வின் அழகை மனித உறவுகளினதும் உணர்வுகளினதும் ஊடாக வரைந்து காட்டுவது ஒரு முக்கிய தேவையாக இன்று எனக்குப் படுகிறது. வரட்டுத்தனங்களை, முன் கற்பிதங்களை விட்டு விட்டு கலை வடிவங்களில் இவற்றை இனங் கண்டு ரசிப்பது உலகத்திற்கு நல்லது என்று யோசிக்கிறேன்.

உதுகள்தான் மணிரத்தித்தின் "ட்ரிக்ஸ்" என்ன இருந்தாலும் அவன் பிராமணன். உதுகளையும் அழகான படப் பிடிப்பையும் காட்டி திசை திருப்பிப் போட்டு தனது மேல் வர்க்க அரசியலை சனங்களில் நைசாகத் திணிக்கும் இவனைப் போன்றவர்களில் நாங்கள் வலு அவதானமாக இருக்க வேண்டும் என்ற விமர்சனங்களிலுள்ள நியாத்தை மதிக்கிறேன். நான் சொல்ல வருவது என்னவென்றால் மணிரத்தினத்தின் வர்க்கப் பார்வைக்கு எப்படி அவர் மட்டும் பொறுப்பில்லையோ அவரது படைப்பிலுள்ள கலாரீதியான உன்னதங்களுக்கும் அழகு

www.tamilarangam.net

வெளிப்பாட்டிற்கும் மணிரத்தினம் என்ற தனிமனிதன் பொறுப்பல்ல.

எந்தவொரு படைப்பாளிக்கும் படைப்பிற்கும் இடையில் கூட்டான மனம், நனவிலி மனம் என்பன செயற்படகின்றன என்பதில் எனக்கு நிறைய நம்பிக்கை. படைப்பை வைத்து ஆளை மதிப்பிடாதே ஆளை வைத்து படைப்பை மதிப்பிடாதே. படத்திலுள்ள கலையை ரசிப்பதில் தப்பே இல்லை. படைப்பாளி சம்பந்தமான விமர்சனங்கள் இருப்பின் அந்த படைப்பையும் தூக்கி எறியாவிட்டால் நாம் பிற்போக்குவாதியென முத்திரை குத்தப் பட்டு விடுவோம் என்ற பயம் எவருக்கும் தேவையில்லை. கலை கலைக்காக என்ற வாதத்துடன் நான் உடன்படவில்லை. அதே வேளை ஒரு படைப்பை வெளியிடுவதற்கு படைப்பாளிக்கு இருக்க வேண்டிய சுதந்திரம் எவ்வளவு அவசியமோ அது போலவே அதனை வாசிப்பவர்கள், கேட்பவர்களின் மனதிற்கும் மூளைக்கும் அதே அளவு தடைகளற்ற சுதந்திரம் அவசியம் வேண்டும். முன் கற்பிதங்களையே நான் இங்கு தடைகள் என்கின்றேன்.

மனித நேசம் நோக்கிய வாழ்வியலின் விரிந்த சிந்தனைக்கு சுதந்திரமான கலை வெளிப்பாடுகள் எந்த ஒரு அரசியற்போக்கை விடவும் நேர்மையாகச் செயற்படுகின்றன என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். பரந்து விரிந்தது இந்த உலகு. நுணுக்கங்களும் நெளிவு சுளிவுகளும் ஆயிரம் கொண்டது மனித வாழ்வு. விரிந்த மனதுடன் கலையை அணுகினால் பொய் சொல்லாமல் அது வாழ்வைக் காட்டும்.

– காளிதாஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன் சில வார்த்தைகள்.

நீண்ட இடை வெளிக்குப் பின் சிந்தனை உங்கள் கைகளுக்கு வருகின்றது. இந்த இடை வெளிக்கான காரணம், சிந்தனை வெளியீட்டிற்குத் தடையாக இருக்கும் நிதி நெருக்கடியேயாகும். நாளுக்கு நாள் உயர்ந்துவரும் உற்பத்திச் செலவும் தாபாற் செலவும் தொடர்ச்சியான வெளியீட்டைப் பெரிதும் பாதிக்கின்றன.

ஆக்கதாரர்களின் ஆதரவு, ஆதரவாளர்களின் வேண்டுகோள்கள் – இவை தொடர்ந்தும் சிந்தனை வெளிவருவதை ஊக்குவித்துள்ளன.

புகலிடத்தில் சுதந்திரமான கருத்துப் பரிமாறல்களுக்கும், புகலிட இலக்கியத்திற்கும் ஒரு தளமாக – சிந்தனை தனது பணியைத் தொடரும். இதற்கு அவசியமாவது உங்கள் நிதி உதவியேயாகும். உங்கள் உதவி சிந்தனை தொடர்வதற்கு உதவும்.

முகவரி:
*SINTHANAI*
*Haussmannstr.107,*
*70188 Stuttgart*

**Bank : Landesgirokasse (Stuttgart)**
**Ac.No: 3403185**
**BLZ : 600 501 01**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடத்திலிருந்து

## புதிய இசை



புகலிடக் கலைஞர்களினால்
இசையமைத்துப் பாடப் பெற்ற
ஒலிநாடா.
கணனிப் பின்னணியுடன்
ஒலிக்கும் இனிமையன
பாடல்கள்.

STEREO
001



விலை : 5 DM

வெளியிடுவோர்: ஒலி ஓவியங்கள்
தொடர்புகளுக்கு:
**Oli oviyankal**
**Postfach 103202**
**44147 DORTMUND**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்